# சரியான கேள்வி

பலபலவென பொழுது புலரும் நேரம். இளைய பிள்ளையும் நாட்டுப் பெண்ணும் இருக்கும் ஊர் நோக்கி வந்து கொண்டிருந்தாள் செல்லம்மாள். ஏதேதோ சிந்தனைகள், அவள் மனதிலே. அவள் பிள்ளைகள் மூவருள், கிட்டுதான் ஊர் ஊராக மாறுபவன் கிட்டுவிடம் வரும்பொழுதெல்லாம் புது ஊர் வரும்படியாகவே இருக்கும். அதனால் செல்லம்மாள் சிறிது மலைப்புக்கொள்வாள். மற்ற இரு பிள்ளைகளிடமும் போனால் அங்கே முன்னமே பழகின ஜனங்கள் இருப்பார்கள். அவர்களும், அபிமானமுடன் அவளை வரவேற்பார்கள். ஆனால், கிட்டுவிடம் வரும்போதெல்லாம் ஊர்ப்புதுமையும், அண்டை அயலாரின் புது முகங்களும் செல்லம்மாளுக்கு ஒரு தினுசாக இருக்கும். நாட்டுப்பெண், பிள்ளை, பேரக்குழந்தைகள் ஆகியவர்களின் ஆதரவையும் அன்பையும் மட்டுமே காணும்படி இருக்கும். மற்ற நாட்டுப் பெண்களைவிட கிட்டுவின் மனைவி சரளா, அன்பிலோ அக்கரையிலோ குறைந்தவளல்ல எனினும், கிட்டுவினிடம் இருக்க வரும்பொழுதெல்லாம் செல்லம்மாளுக்கு உற்சாகம் சற்று குறைவுதான் இப்பொழுதும் அந்த மனநிலைதான் செல்லம்மாளுக்கு!

ரயிலடிக்குக் கிட்டு வந்தான். வரவேற்றான். வண்டியிலே வரும்பொழுது, வழியிலே தட்டுப்பட்ட இடங்கள், ஊரின் விசேஷங்கள் முதலியன பற்றி அன்னைக்குக் கூறிக்கொண்டே வந்தான் அவன்.

"ஆச்சு, தெரு வந்தாச்சு! அதோ, அந்த வீடுதான்!" என்றான் கிட்டு.

வீட்டைக் கவனிக்காமல், தெருவைக் கவனித்தாள் செல்லம்மாள். நிறைய வீடுகள் இருந்தன! நிறைய ஜனங்கள் இருப்பார்களே! மலைப்பு அதிகரித்தது செல்லம்மாளுக்கு!

ஜாங்க் ஜாங்க் என்று வண்டி வீட்டின் முன் நின்றது; கிட்டு இறங்கினதும், செல்லம்மாளும் இறங்கினாள்.

இறங்கின செல்லம்மாளின் பார்வை அடுத்த வீட்டுத் திண்ணையிலே நிற்கும் உருவத்தின்மீது விழுந்தது. வாசலில் கோலம் போடும் வேலைக்காரச் சிறுமிக்கு ஏதோ கூறிக் கொண்டே நிற்கும் அந்த அம்மாள், அன்னைப் போன்றவள், 'தன்னையொத்தவள்' என்று ஒரு நொடியில் எடை போட்டுப் பார்த்துவிட்டாள். உடனே ஒரு நம்பிக்கை, ஆறுதல் ஏற்பட்டுவிட்டது. உகந்த தோழியொருத்தியைக் கண்டெடுத்துவிட்ட சந்தோஷமுடன் கிட்டுவைப் பின் தொடர்ந்து வீட்டுக்குள்ளே போனாள்.

குசலம் முடிந்ததும் சரளாவை செல்லம்மாள் கேட்ட கேள்வி அடுத்த வீட்டு அம்மாளைப் பற்றித்தான். அன்று பகலே அடுத்த வீட்டுக்குப் போய், சுப்புலக்ஷ்மியம்மாளுடன் பரிச்சயம் செய்து கொண்டுவிட வேண்டும் என்ற அவா எழுந்தது. சரளா அந்த அவாவை உணர்ந்து அழைத்துச் சென்றாள்.

அந்த அம்மாளும் தாலிப் பாக்கியம் இழந்தவள் - 'இருவரின் அமங்கலைத் தோற்றமும் தற்காலத் தோற்றம் தான், அதைப்பற்றி வம்பு பேச வேறு எவரேனும் இருக்கலாம் - சுப்பு லக்ஷ்மி அம்மாள்தான் தனக்குகந்த சிநேகிதி. இந்தப் புது ஊரிலே அந்த அம்மாள் தகுந்த துணை': இவ்வாறெல்லாம் தோழமையார்வம் குமிழியிட சென்றாள் செல்லம்மாள்.

சுப்புலக்ஷ்மி அம்மாள் இருவரையும் வரவேற்றாள்; பேசினாள். சரளாவுடன் பழக்கம் அதிகமாக இருந்ததனாலோ என்னமோ, அவளோடுதான் அதிகம் பேசினாள் இதை இயற்கையாக எடுத்துக்கொள்ளவே செல்லம்மாள் முயன்றாள். ஆனால் அந்த அம்மாளின் பேச்சிலே தொனித்த ஒரு வேற்றுமை பாவம் கண்டுதான் செல்லம்மாளின் உற்சாகம் ஒடுங்கிவிட்டது சுப்புலக்ஷ்மி அம்மாளின் நாட்டுப்பெண் ஹேமா, எப்படி ஒதுங்கினாற்போல

ஒரு நிலையில் இருந்தாளோ, அந்த நிலையிலே சரளாவின் மாமியார் செல்லம்மாள் இருந்தாள்.

எத்தனையோ ஆவலோடு வந்த செல்லம்மாள், வந்த பத்து நிமிஷங்களுள் எழத் துடித்தாள் போகலாமா சரளா?" எனக் கேட்டாள் சரளா ஹேமாவிடமும் ஓரிரண்டு வார்த்தை அன்போடு பேசி, சுப்புலக்ஷ்மி அம்மாவிடம் விடை கொண்டு கிளம்பினாள்.

செல்லம்மாளின் மனசு கலங்கிவிட்டது. அடுத்தகத்திலே சுப்புலக்ஷ்மி அம்மாள் யஜமானி! இங்கே தன் பிள்ளையின் வீட்டிலே சரளா அந்தப் பதவி வகிக்கிறாள்! இந்தப் பிள்ளையிடமும் அந்தப் பிள்ளைகளிடமுமாக வாழ்நாளின் வறண்ட பகுதியைக் கழிக்கும் தனக்கு, அந்தப் பதவி ஏது? பிள்ளைகளுக்கு வேறு ஒன்றையும் வைத்துச் செல்லாவிடினும், தன்னை மட்டும் பிள்ளைகள் பகிர்ந்து கொள்ளுமாறு கணவர் விட்டுவிட்டுப் போய்விட்டார்! எந்தப் பிள்ளைக்கு எப்போது உதவி தேவையோ அப்போது செய்யவும், 'வஞ்சனை'யின்றி நாட்டுப் பெண்களுக்குச் சுதந்திரங் கொடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறாள் செல்லம்மாள் சுப்புலக்ஷ்மி அம்மாள் தன்னோடு சரியாய்ப் பேசவில்லை என்றால் அதற்குக் காரணம் இருக்கத்தானே இருக்கிறது! சுப்புலக்ஷ்மி அம்மாள் செல்வமும் செல்வாக்கும் படைத்தவள்; விதவையாயினும் அவள் கைகளிலே பொன் வளையல்களும், கழுத்திலே சங்கிலியும், இடையிலே பட்டுப் புடவையும் காட்சி அளிக்கின்றன. பலவிதங்களிலே தன்னையொத்தவள் என்னும் எண்ணமுடன் தோழமை நாடிச் சென்றது மடமையல்லவா? சொந்தச் செல்வாக்கும் படைத்தவளாயிருப்பதால் பிள்ளை, நாட்டுப் பெண், அண்டை அயல் ஆகிய பலரின் பணிவையும் படைத்து இல்லத் தலைவியாக நிலைத்திருக்கும் அந்த அம்மாள், தன்னை யாரோ நடுவில் வந்து போகிறவளாகப் பாவித்து, சரளாவை மதித்துப் பேசுவது இயற்கைதானே?

இவ்வாறு செல்லம்மாளின் மனதிலே எழுந்த ஏமாற்றமும் சோர்வும் லேசாயில்லை. இரண்டு மூன்றாண்டுகளாகவே நாடோடி வாழ்வு நடத்துவதாகக் குறை கொண்டிருந்தாள் - ஆனால் தன் நிலைமைக்கேற்ற முறையிலே இருப்பதே சரி என்னும் நினைப்பிலே கலங்காதிருந்தாள். இப்பொழுது ஆவலுடன் போன இடத்திலே ஏற்பட்ட பராமுகம் அவளை வேதனைக்குள்ளாக்கியது.

அடுத்த வீட்டு அம்மாளின் தோழமையைப் பற்றி ஆவல் அணைந்தது. எப்போதாவது தெருவிலோ வாசலிலோ தென்பட்டாலும் சட்டென விலகிக் கொண்டுவிடலானாள். தான் உண்டு தன் காரியம் உண்டு என்று இருந்தாள். பரிச்சயம் ஆன சிலருடன் கூட அளவோடு பழகினாள். பல விதங்களில் தனக்கு ஒத்தவளாகக் காணப்படும் சுப்புலட்சுமியம்மாளே ஒரு தினுசாகத் தன்னை நோக்கினால், பிறர் இன்னும் குறைவாகவே மதிப்பர் என்ற அச்சமும் விருப்பமின்மையும் ஏற்பட்டுவிட்டன போலும்! அடுத்தகத்திலே சுப்புலட்சுமி அம்மாள் குரலெடுத்துக் கூச்சல் போட்டு வேலைக்காரியையோ, பணியாளையோ அதட்டினால், இங்கே செல்லம்மாள் குரல் நெஞ்சிலே அமுங்கிப் போகும் இங்கே சரளாதானே வீட்டை நிர்வகிக்கிறாள்! வேலைகள் ஏவி வேலைக்காரியைப் பணிக்கிறாள்? தன்னால் முடிகிறதா? அப்படி இருப்பதும் பாந்தமாகத் தனக்கு இராதுபோல மனது கூசுகிறதே! . . .

இந்த நிலையில் செல்லம்மாள் சஞ்சலத்தையெல்லாம் அடக்கியாள விரும்பி, ஒதுங்கியொதுங்கியே இருந்தாள். வீட்டிலே கூட அவசியமான விஷயங்களில்தான் புகுந்தாள். செல்லம்மாள் எவ்வளவு ஒதுங்கினாலும் அதற்குத் தடை ஏற்படவே இல்லை. வயது அதிகரிப்பதனால் அவள் அதிகம் ஒதுங்குவது இயற்கைதானே என்று தான் சரளா எண்ணினாள் போலும்!

இந்த விசை நிம்மதிக்கு ரொம்பவும் குந்தகம் விளைந்துவிட்டதனால் போலும் செல்லம்மாள் சீக்கிரமாகவே மற்றொரு பிள்ளையிடம் போக ஆயத்தமானாள்.

பரிச்சயமான ஓரிரண்டு பேரிடம் சொன்னாள். புறப்பட்டுப் போகும் முதல் நாள் சுப்புலட்சுமி அம்மாளிடம் சொல்லிக்கொண்டு போகமட்டும் எண்ணியிருந்தாள்.

செல்லம்மாள் புறப்பட நாலுநாள் இருக்கும்பொழுது சுப்புலட்சுமி அம்மாள் ஏதோ அலுவலாக வந்தாள். நாட்டுப் பெண்ணையோ, ஆளையோ அனுப்பி தேவையானதைக் கவனித்து வந்த அந்த அம்மாள், அன்று ஏதோ பண்டம் கடன்கொள்ள நேரடியாக வந்தாள். அலுவல் முடிந்ததும் திரும்பிவிடாமல், செல்லம்மாளை நோக்கி, "என்ன, ஊருக்குப் போகப் போறேளாமே! கேள்விப்பட்டேன்! என்ன அவசரம்! வந்து இரண்டு மாசம்தானே ஆச்சு?' என்றாள்.

"அந்த நாட்டுப் பெண் உடம்பு செவ்வையாயில்லை . . . ." என்று இழுத்தாள் செல்லம்மாள்.

"உடம்பு சரியில்லைன்னா போக வேண்டியதுதான்! ஆனால், அதுக்காக இவ்வளவு சீக்கிரம் போகணுமா? சரளா பகு சமர்த்து. சகலகாரியமும் தெரியும். உட்கார்த்தி வைத்துச் செய்கிறாள் இங்கே இன்னும் நாலு மாசம் இருந்துட்டுப் போகலாம்! அவசரமென்ன?" என்றாள் அழுத்தந்திருத்தமாக சுப்புலக்ஷ்மி அம்மாள். அதிகாரம் படைத்த மாமியாருக்கே உரித்தான தொனியில் கூறிய அவளுடைய சொற்கள், செல்லம்மாளுக்கு வேதனையும் ஆறுதலும் ஒருங்கே கொடுத்தன.

சுப்புலக்ஷ்மி அம்மாள் சொல்கிறாள் என்றால், அது அவள் நிலைக்குப் பொருந்தும். ஒரே பிள்ளை அவளுக்கு; அந்தப் பிள்ளையிடம் இருக்க வேண்டியது தான் என்ற முறையும் உரிமையும் துலங்கச் செல்வாக்குடன் ஒரே இடத்திலே ஊன்றி பலம் பெற்றிருக்கிறாள். அதிகாரமுடன் ஆளும் பாக்கியமுடன் விளங்குகிறாள்! அந்த அம்மாளைப் போல் தான் பேச முடியுமா? இருக்க முடியுமா? செல்லம்மாள் மனதுள்ளே வருத்தமுற்றாலும் மெல்லச் சிரித்தாள்.

"அங்கே அப்படி இருக்கும்போது போகாமல் இருக்கிறதா நான்?' என்றாள்.

'இங்கே இப்படி இருக்கும் போது!' என்றுதான் கூற நாவாடியது அவளுக்கு! ஆனால், சொல்லுவாளா வெளியில்?

"போகவேண்டியதுதான்! பிள்ளைகள்ளாம் கண்ணா பார்த்துக்கறா! அங்கே கூப்பிடுகிறபோது போகத்தான் வேணும்!" என்றாள் சுப்புலக்ஷ்மி அம்மாள்.

செல்லம்மாள் ஒன்றும் பேசவில்லை அந்த சமயம் சரளா அங்குவந்து "நீங்களும் ஒத்துண்டூட்டேளாக்கும், மாமி! இரண்டு மாசத்திலே திருவிழா வருகிறதே! அதற்கு இருந்துட்டுப் போகலாம்னு சொல்லுங்கோ! நாங்கள் எத்தனை சொல்லியும் 'பார்க்கலாம், பார்க்கலாம்'னு சொல்லிண்டே, கடைசியிலே ஊருக்குப் போக நாள் பார்த்தாச்சு, அம்மா!" என்றாள்.

"இந்த மட்டும் இருங்கோன்னு வாய் நிறையச் சொல்லுகிறாயே! அதைச் சொல்லு!" என்று சுப்புலக்ஷ்மி அம்மாள் கூறும்பொழுதே, சரளா போய்விட்டாள் ஆகவே செல்லம்மாளின் பக்கம் திரும்பி 'ஆமாம், திருவிழா எல்லாம் முடிஞ்சப்புறம் போகலாம்! அவசரமென்ன? ஆத்துக்கும் அடிக்கடி வாருங்கோ! சரளா எட்டூருக்குக் காரியம் செய்வாள்! நீங்கள் வரத்துக்கு என்ன?" என்று கடைசி தடவையாக வற்புறுத்திக் கூறிவிட்டுப் போனாள் சுப்புலக்ஷ்மி அம்மாள்.

பொறுப்பற்ற தன் நிலைமையை அந்த அம்மாள் நன்கு சுட்டிக் காட்டிப் பேசுவதை செல்லம்மாள் வருத்தமுடன் கவனித்தாலும், இன்று சரளமாக அந்த அம்மாள் பேசியதைக் குறித்து வியப்புற்றாள்.

"என்னமோன்னு நினைச்சேன்! கலகலப்பாகத்தான் பேசறார்!" என்றாள் சரளாவிடம்.

"பேசாமலென்ன? நீங்கள் வரதுக்கு முந்திகூட நிறைய விசாரித்தார். நல்ல சுபாவம்தான்! ஆனால், ஒரு விஷயம் தான் எனக்குப் பிடிக்கவில்லை!" என்றாள் சரளா.

இதுநாள் வரை மாமியைப் பற்றிக் குறை கூறாத சரளா இன்று குறை கூறுவானேன்! தன்னை இன்னும் பலநாள் தங்கும்படி அந்த அம்மாள் கூறியதுதான் இந்தப் புது விமரிசனத்திற்குக் காரணமோ? செல்லம்மாள் துணுக்குற்று, மெல்ல, "ஏன் , என்ன பிடிக்கவில்லை?' என்று கேட்டாள்.

"அந்த மாமி சகல காரியமும் தானே இழுத்துப் போட்டுக்கொண்டு செய்யறது! அப்புறம் நாட்டுப் பெண்ணுக்குக் காரியமே தெரியல்லைன்னு சொல்றது! அந்தப் பெண்கிட்ட விட்டுத்தான் பார்க்கட்டுமே? காரியம் தெரியறதா இல்லையா பார்க்கிறேன்!" என்றாள் சரளா நூற்றுக் கிழவி போல.

செல்லம்மாள் உடைந்த குரலில், "அந்த அம்மாளுக்கு என்ன தலையெழுத்தா" என்று இழுத்தாள்.

"தலையெழுத்தா, பதவியையும் செல்வாக்கையும் விட்டுவிட!" என்று கூறவே செல்லம்மாள் எண்ணினாள்.

ஆனால் சரளா, "தலையெழுத்தா, இன்னும் உழைக்க!" என்று அந்த வாக்கியத்தை முடித்தாள்!

சுப்புலட்சுமி அம்மாள் அன்று கலகலப்புடன் பேசியது சற்று திருப்திதயளித்ததால், செல்லம்மாள், ஊருக்குப் போகும் முதல்நாள் சொல்லிக் கொண்டு போக மட்டும் அடுத்தகம் போக எண்ணியிருந்ததைச் சிறிது மாற்றிக்கொண்டாள் ஊருக்குப் போய்விடுமுன் இரண்டு நடை போய் வரலாம் என்று தோன்றவே சரளாவிடம் கூறினால் இருவருமாகப் போனார்கள்.

"உம், ஊரிலிருந்து வந்தன்னிக்கு வந்ததுதான்! அப்புறம் இப்போ புறப்பட்டுப் போறதுக்கு முந்தி வந்தேளாக்கும்! ஏண்டி, சரளா, நீயும் மாமியாருக்கு ஓத்தூதினாயா?" என்றாள் சுப்புலட்சுமி அம்மாள் உரிமையோடு.

"நான் எங்கே கூப்பிட்டாலும் அம்மா வந்தால்தானே மாமி!" என்றாள் சரளா.

"என்னமோ இந்த விசை இப்படியாச்சு! பிழைச்சுக் கிடந்தால் நான் மறுபடியும் இங்கேயே வரும்படி கிட்டுக்கு மாத்தலாகாமலிருந்தால் அப்போ அடிக்கடி வரேன்!' என்று சிரித்துக்கொண்டே சமாதானம் சொன்னாள் செல்லம்மாள்.

"உம், உங்களுக்கு நினைச்சால் ஓரிடத்திலிருந்து கிளம்பிவிட முடியறது! நான் வீட்டை விட்டு இந்தண்டை அந்தண்டை நகர வழியில்லை!" என்றாள் சுப்புலட்சுமி அம்மாள்.

சரளா இந்தச் சமயம் தன் மாமியாரைப் பார்த்தாள் அன்று மாமியைப் பற்றி அவள் சொன்னது சரிதானே என்றுதான் கண்கள்மூலம் கேட்டாள் பிறகு ஹேமாவைப் பார்த்தாள். எட்டி நின்றிருந்தபோதிலும் அந்தப் பெண்ணின் முகம் சுண்டிக் கிடந்ததை சரளா கண்டுகொண்டாள்.

சுப்புலட்சுமியம்மாளைக் குறும்பாகப் பார்த்தாள் சரளா. "ஏன் மாமி! ஒரு விஷயம் எனக்கு ரொம்ப வேடிக்கையாய் இருக்கு!" என்றாள்.

"என்னடிம்மா அது?" என்றார் மாமி. சரளா புன்னகை பூத்தாள் லேசாகப் புருவங்களை உயர்த்தி விழிகளைக் குறுகுறுப்பாக்கி மாமியை ஏறிட்டு நோக்கினாள்.

"வீட்டுக்காரியம் செய்ய வேண்டியிருக்கேன்னு நாட்டுப் பெண்கள் குறைப்பட்டுப்பான்னும், நாட்டுப் பெண் காரியம் செய்யல்லையேன்னு மாமியார்கள் குறைப்படுவான்னும் சொல்றது வழக்கமாச்சே மாமி? ஆனால், நம்மகங்களிலே நேர் விரோதம்! காரியம் செய்ய மாமியார் விடுகிறது இல்லையேன்னு உங்க நாட்டுப் பெண்ணுக்கு வருத்தம்! எங்கள் மாமியாரானால்

நாட்டுப் பெண்கள்ளாம் பொறுப்பையும் காரியத்தையும் பிடுங்கிண்டு பொம்மையா ஆக்கிவிட்டாளேன்னு வருத்தப்படறார்! இது வேடிக்கையாயில்லை?" என்று கேட்டாள் சரளா.

உரிமை, சொற்றிறன், சொல் நயம் ஆகியவை கொண்டு சரளா அவ்வாறு சொன்ன மறுவினாடி, ஒரு சுவையான பார்வைக் கட்டம் நிகழ்ந்தது.

செல்லம்மாள் வியப்புற்றாள்! சுப்புலக்ஷ்மி அம்மாள் திகைத்தாள். ஹேமா தெளிவுகொண்டு மலர விழித்தாள் அனைவரும் சரளாவைப் பார்த்தனர். சரளா அனைவரையும் பார்த்தாள் - எல்லாம் ஒரு வினாடி!

மறுவினாடி சரளா, "உலகம் பல விதம். மாமி! இல்லையா!' என்று சிரித்துப் பேசி பேச்சை முடித்தாள்.

அன்றிரவு சரளா மாமியாரிடம் "இன்னும் இரண்டு மாதம் இருந்துட்டுப் போகலாம், அம்மா!" என்றபொழுது செல்லம்மாள் உடனே சம்மதித்துவிட்டாள்.

அதற்குப் பிறகு செல்லம்மாளும் சுப்புலக்ஷ்மி அம்மாளும் அடிக்கடி ஜோடியாக கோவில் குளம் போகலானார்கள். ஹேமாவும் சரளாவும் எட்டி எட்டி நிற்காமல், நெருங்கி நெருங்கிப் பழகினார்கள். சரளாவின் கேள்வியின் சரியான பலனாக, "அந்தந்த இடத்திலே அந்தந்த வயசுலே அப்படி அப்படி இருந்தால்தானே அழகு, நிம்மதி?" என்று இந்த இரண்டு ஜோடிகளும் திருப்திப்பட்டுவிட்டார்கள்.

***********

(சுதேசமித்திரன், ஜனவரி 21, 1951)